உ

சிவமயம்:



ஸ்ரீ

# ஹரிராம நாம சங்கீர்த்தனை.

இஃது

இராமநாதபுரம் ஜில்லா பாம்பூர் கிராமத்திலிருக்கும்
மகா-ள-ள-ஸ்ரீ ஆள்வார்பிள்ளையவர்கள் குமாரன்
P. A. இராமசாமியாபிள்ளை
யவர்களால் பாடப்பட்டு

பரம்பக்குடி
"மாணிக்கம் பிரஸில்"
பதிப்பிக்கப்பெற்றது.
[...ன் விலை] 1913. [ அணா 1.

Q22;417
N13
180028

உ

சிவமயம்.

## முகவுரை.

எனது வாசஸ்தலமாகிய இராமநாதபுரம் ஜில்லாவைச்சேர்ந்த பாம்பூர் கிராமத்தில் பஜனை நடந்தேறாதிருந்தமையால் 1890-ஸு பிறந்த யான் எனது நேசர் சிலருடன் சேர்ந்து பஜனை நடத்தவேண்டுமென்று அவாக்கொண்டிருக்கையில், எனது மாமனாரான மகா-ள-ள-ஸ்ரீ இராமச்சந்திரம்பிள்ளையென்பவர் தனது சிநேகரொருவருடன் பஜனை நடத்த முற்பட்டனர். அவர்களுடன் சேர்ந்து பராபவஸு புரட்டாசிமீ 6உ (22—9—1906) சனிக்கிழமையன்று பஜனை ஏற்படுத்தி நடந்தேறப்பெற்றது அப்பால் இவ்வரிராமநாம சங்கீர்த்தனையை இயற்றினன்.

இதிலே அங்கங்கே இராகங்களும், தாளங்களும், இன்னதென்று போட்டிருந்தாலும் இராக தாளங்களுக்கு அதுவே நிபந்தனையல்ல, சுதிக்கியானம் லயைக்கியானம் தெரிந்த மஹா சங்கீத வித்வான்கள் தங்கள் வல்லமைக்குத் தக்கபடி ஒரு இராகத்தை பல இராகங்களிலும் ஒரு தாளத்தைப் பல தாளங்களிலும் பாடிக்கொள்ளலாம்.

ஆயினும் எழுத்து, சொல், பொருள் முதலியவைகளில் குற்றமுறு வண்ணம் பாட, வேண்டுகின்றேன்.

12—12—12
பாம்பூர்.

இங்ஙனம்.
P. A. இராமசாமி.

உ

சிவகுருமயம்.



# விநாயக ஸ்தோத்திரம்.

## விருத்தம்.

அரிதனக்குகந்த மாமருகனே யுமையவள் அன்புடன் மகிழ்ந்தருளிய
ஐந்துகரமானவா தொந்தி வயிறுனவா ஆறுமுகமான வடிவேல்
முருகனுனவன்கானில்வருகவென் றழைக்கவேமூர்க்கமாய்வெண்கரியதா
மூடமதியுள்ளவனவேடர்கட்கிளையபெண்முன்வந்தஞானகுருவே [ய்
திரிபுரம்தன்னையேயொருநொடிப்போழ்தினில்தீய்த்தபரனீன்றபுதல்வா
தீவிரமதாய்பூஜைசெய்த ஔவையினுட சிந்தைபோற் செய்தமுதல்வா
அரிராமநாம சங்கீர்த்தனம் தன்னையானடியேனித் தரணிமீது
அன்புடனே சொல்லவேயுன்பதம் தந்தென்னை யாண்டருள்புரிகுவாயே

---

இராகம்-பியாகு, தாளம்-ஆதி.

## பல்லவி.

நாதா வந்தனம் கண நாதா வந்தனம்.

## அனுபல்லவி.

நாதா வந்தனம் மலர்ப் பாதா வந்தனம் (நாதா)

## சரணங்கள்.

பார்வதி பாலா அப்பரமனின் சீலா
கார்மேவு மைந்து கரங்கொண்ட கண (நாதா)
ஆகுவாகனனே அந்தரி மருகனே
வாகுடன் என்னை வந்தாளும் கண (நாதா)
ராமசாமியை எந்நாளும் காக்கவே
தாமிதஞ் செய்யா தருள் செயுங் கண (நாதா)

## வேறு தரு.

இராகம்-கமாஸ், தாளம்-சாப்பு.

### பல்லவி.

கருதினேன் கார்த்தருள்வாய்—ஓம்
கணபதியேவுனதடியை-யநுதினமென்மனதினில்யான் (கரு)

### அநுபல்லவி.

பருதியைக்கண்ட பனியைப்போலடியார்
பாவத்தை நீக்கிடும் நாதாவுன் பாதமே
உறுதியென நம்பிச் சிறியேன் தொழுதேன்
உம்பர்கள் தொழும் பொருளே என்பவம் தீரன்புடனே (கரு)

### சரணங்கள்.

பசாங்குசதரா பக்த தயாபரா
பங்கயமாமலர்த் தாளாயாளுந்தனே
நேசமுடன் தொழு தேன் வரம் தந்தருள்
நித்தனேமா சுத்தனேகா ரத்திமுகா நித்தமும் யான் (கரு)
ஆதியந்தமி லாத நாதனே
அனைவர்க்கு முதல்வ ரானந்தனே
சோதனை செய்யாம லேயென் கவிக்கருள்
தூயனே விநாயகனே நேயமுடன் நாயடியேன் (கரு)
ராமசாமியென்னு சிறிய பாலகன்
ஞாலத்திற் செந்தமி ழாலேயரிராம
நாம சங்கீர்த்தனம் நண்புடனே சொல்ல
நாதனேவி நாயகனே வுன் னாதரவாய் நீதமா யான் (கரு)

### நாமாவளி.

மூஷிகவாகனா சரணம்-எந்தனையாளும்-மூலாதரனே சரணம்.
தும்பிமுகனே யுந்தனையே தொழுதேன் காருமெந்தனையே.

---

## சரஸ்வதி ஸ்தோத்திரம்.

### விருத்தம்.

ஆயர்குலத்தினிலே யவதரித்து மிகுவன்புடன் பாண்டுமைந்த
ரைவர்க்காய் கௌரவரான துரியோதனாதியரை வெல்வதற்கு
தூயகார்வண்ண னாய்த் துவாரகைமன்ன னாய்த் துலங்கியே தூதுசென்றோன்
சுதனானவோர்நான்குவதனன்செய்வேள்வியிற்றோன்றியேவந்ததாயே

நேயமுட னரிராமநாம சங்கீர்த்தன நீள்புவி தன்னிற் சொல்ல[யெந்தன்
நினைந்தேன் யானதிற் பிழைகளேது முறுமர்சார்க்க நின்பாலனை—
வாயினிலேவீற்றிருப்பாயே வெண்டாமரையில்வசிக்கும்பாரதிவாணியே
வாக்கின் செல்வியே யெனக்கார்க்க வோதிமமேறிவருகுவாய் வருகு
வாயே.

## தேசாதி தேசர் புகழ் என்ற வர்ணமெட்டு.

இராகம்-சங்கராபரணம், தாளம் சாப்பு.

### கண்ணிகள்.

தாயே சரஸ்வதியே உந்தன் தாள்தனை போற்றினேனே
மாயன் மகன்றேவியே யென் வாக்கில் குடியிருப்பாய்.
ஓதிமம் தன்னிலேறும் உலகமாதாவே நீ யென்னாவில்
நீதியுடன் வீற்றிருப்பாய் நீடூழி காலம் வரை.
பாரதியே யுனையான் வெகு பக்ஷமாய்ப் போற்றினதால்
மாருபாடு செய்யாமலென் வாக்கில் குடியிருப்பாய்.
ஆவலுடனே யுந்தன் பொன்னடிதனை போற்றுமெந்தன்
நாவினிலே வீற்றிருந்து நல்வாக்குத் தந்தருள்வாய்.
ராமசாமி சொல்லரி ராம நாம சங்கீர்த்தனத்தில்
பூமிதனி லுள்ளோர் பிழை புகலாமல் காத்தருள்வாய்.

### நாமாவளி.

புலவர்கள் போற்றும் புத்தகபாணியே
கலைதனைக் கற்றுவைத்தருள்வாய் நீயே
கஞ்சமலர்மேலிருப்பவளேபஞ்சைதன்னைகாத்தருள்பளே
புத்தகபாணியே வந்தருள்வாய் வித்தையெனக்குத் தந்-
[தருள்வாய்

---

## பரமசிவ வணக்கம்.

### விருத்தம்.

இப்புவி தன்னிலே தப்பிதமின்றியுன் இணையடி போற்றுவோர்கள்
இருதயம் தன்னிலே கருதும் வரங்களை இசைந்துமே அவர்களுக்கு
எப்பவும் கொடுக்கின்ற அப்ப நீ யல்லவோ எழியவர் தங்கள்மீது
இஷ்டம்வைத்தென்றைக்கும் அஷ்ட ஐஸ்வரியமுமீய்ந்திடும்பரம்பொ-
அப்புவின்மீதினில்சர்ப்பத்தில்பள்ளிகொள்ளாதிநாராயணன்மேல்[ருளே
அரிராமநாம சங்கீர்த்தனம் பிழையின்றி அன்புமிகக்கொண்டு பலரும்
ஒப்பவே யானடியேன் செப்பவே வரமெனக்குகந்தருள் கருணை கூர்ந்து
உமையவளை யிடத்தினிலமைத்தவிசுவேசனே உம்பர்மகிழும்பர்முதலே

### கண்ணிகள்.

சங்கரா கங்காதரா தயாபரா கருணாகரா
இங்கனமெனைக் காத்தருள இடபவாகனமேறிவா-சிவ (சங்)
பாசுபதா அஸ்திரத்தைப் பற்குணனுக் கீன்றவா
காசிதன்னில் பிர்மஹத்தியை களிப்புடனிழந்தவா சிவ (சங்)
ஆகுவாகனன்றனக்கு அன்போடே கனியளித்தவா
நாககுமாரியினுட நாயகா யெனையாளவா-சிவ (சங்)
ராமசாமி ஞேஞேதினேனரி ராமநாம சங்கீர்த்தனம்
பூமிமுழுதும்புகழ்பெற்றேவரப்-புண்ணியனே வரமருளவா-சிவ (சங்)

### நாமாவளி.

சிவனே கயிலை மலைவாசா
சிறியேன் வினைதீர் ஜெகதீசா.

---

## அம்பாள் ஸ்தோத்திரம்.

### விருத்தம்.

ஈராறு புயங்களுமோராறு சிரங்களுமிலங்கவே வர்ண மயின்மீ
தேறிவரு கந்தர்க்கும் காரானை வதனர்க்கு மின்பமதாகவேயதி
சீராகவே முலையிலூறு மமுதந்தனை திகட்டவுண்பித்த தாயே
ஜெகமதனிலே மனிதஜென்ம மதையெடுத்தோர்கள்செப்பியே முத்தி-
நாராயணன்மீது தாராளமாகவே நாயடியேனரிராம [பெறவே
நாம சங்கீர்த்தன நேமமாய்ப் பாடிட நல்குவாய் வரமெனக்கு
நாரியே பரமனுட பாரியே வரையரசன் நண்புடனே யருளிய
நங்கையே யெனையாளச் சிங்கமீதேறியே நாடியே வருகுவாயே.

### தாயே தனையனுக்கருள் யென்ற வர்ண மெட்டு.

இராகம்-தோடி, தாளம்-ஆதி.

### பல்லவி.

தாயே தமியேனை யாண்டருள்வாய் ஜகமீதினிலேயெந்தன்
தாயே தமியேனை யாண்டருள்வாய்

### அனுபல்லவி

மாயன் சகோதரி யேயுன் திருவடியைச்
சேயன் துதித்தேனதி நேயமுடனேயெந்தன் (தா)

சரணங்கள்.

பாரிலுனதுமபொன்னடிதனையே-வெகுபண்புடன்போற்றிடும்
யாருமடைகுவார் முத்தி தனையே
காருமெந்தனை யென்று கூறுமடியவனை
சீருடனே காத்திடு மாரியே நீ யெந்தன் (தா)
ஆறுமுகவனை யீன்றெடுத்தாய்-அவர்க்கயிர்தமீய்ந்துகொடிய
சூரர்களைக் கொல வேல் கொடுத்தாய்
கோரும் வரம் பெறக்கே தாரி கௌரி விரதம்
கோரிமுடித்தாயடி யாரைக்காத்தா யெந்தன் (தா)
ராமசாமியுன் பதமலரை நாடிமாசுகளின்றி புரி
ராமநாம சங்கீர்த் தனஞ்சொலவே
நேமமுடனெனக்குத் தாமிதமின்றிவரம்
மாமகிழ்வுடன் தா வேழுறையிட்டேனெந்தன் (தா)

நாமாவளி.

சிங்கத்தின் மீதேறும் ஜெகதீஸ்வரியே
சிறியேன் வினைகளைத் தீர்த்தருள் புரியே.

---

## சுப்பிரமணியர் ஸ்தோத்திரம்.

விருத்தம்.

உம்பர்கட் கிடுக்கஞ்செய் வம்பரை வெல்லவே
உமைதந்த வேல் விட்டவா
உறுமையுடன் தந்தைக்கு பிரணவ மந்த்ரத்தை
உபதேசம் செய்த வுந்தன்
செம்பொனடி மறவாத அன்பர்களைச் சேர்வினையைத்
தீப்பட்ட பஞ்சுபோல
சிதாவே செய்பவா சதுர்முகப் பிரமனைச்
சிறையிட்ட செந்திவேலா
அம்புவிதன்னையே சம்ப்ரமமாகவே
அனந்த நாராயணன்மேல்
அரிராமநாமசங் கீர்த்தனம் செய்ப வந்
தருளுவா யாறுமுகவா

நம்பினே னுன்னையே அன்பா யெனக்காரும்
நங்கை தெய்வானை வள்ளி
நாயகா என்றாரு நேயமாய் மயின்மீது
லாவியே வரு கந்தனே.

## வேலுமயிலெனக்காலுந் துணைசெய் என்ற மெட்டு.

இராகம்-காம்போதி, தாளம்-ரூபகம்.

### பல்லவி.

வேலவா யெனை யாளுந்தயாபரனே—விசுவேசனருளிய
வேலவா யெனை யாளுந்தயாபரனே

### அனுபல்லவி.

சீலமுடனேயிந் ஞாலமதனிலே
சாலத்தொழூம் பக்தர் பாலமரும் கதிர் (வே)

### சரணங்கள்.

பாரதந் தனை மேருகிரியிலேயே பண்பாய் வரைந்தவர்க்கிளைய
ஆறுமுகனே வுன் சீரடிகள் தனையே
கோரித்துதித்திடு வோரைக் கொடும் வினை
சேராதிருக்கவே தீரமுடன் செயும் (வே)
ஆயிரங் கண்ணற்கு நேயமான மருகா அறுவர்க்கிளைய வள்ளியும்
தூய தெய்வானையு மேயணையு முருகா
தீய சூரர் தன் மாய மறிந்தவுன்
சேயனெனக்குச் சகாயமானவடி (வே)
ராமசாமி யரி ராமடி நாம சங்கீர்த் தன மத்தனைச் சாற்றசிவ
காமிதன் புதல்வனே மனதுகந்து நீர்
மாமயிலின்மீது க்ஷேமமுடன் வந்து
தாமிதமின்றித் தாமே வரந்தந்து (வே)

### நாமாவளி.

பழனிமலேமே லிருப்பவனே
பக்தர்கள் வினையை யருப்பவனே.

## ஆஞ்சநேயர் துதி.

முன்னூல் விருத்தம்.

அஞ்சிலே யொன்று பெற்றானஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றாறாக ஆரியர்க்காகயேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக்கண்டயலாரூரில்
அஞ்சிலே யொன்றவைத்தானவ னெம்மையளித்துக் கார்ப்
[பான்.

### தரு.

வடிவேல் முருகையா யென்ற வர்ண மெட்டு.

பல்லவி.

அடியேன்றனே யாள்வாய்— அனுமந்தா நீ
அடியேன்றனே யாள்வாய்

அனுபல்லவி.

அடியேனெனக்கு வுன்னை யன்றிப்பிதாகுரன்னே
திடமாகவேறேயுண் டோ-செப்புவாயொப்புவாயிப்புவிதன்னிலே

சரணங்கள்.

பாவியானாலு முன்னைப் பணிந்ததினாலே முன்னே
பூவின் கணவன்றன்னைப்-பூர்த்தியாய்ச் சீர்த்தியாய்க் கார்த்தது
[போலவே (அ)
ஆஞ்சநேயனே வுன்னை அடியேன் பணிந்தேனென்னை
வாஞ்சையாய்க்காரையோதி-வாசனே நேசனேகேசவன்தூதனே
ராமசாமி சொல்லரி ராமநாம சங்கீர்த்தனம்
க்ஷேமமுறவே செய்வாய்-தேவனே ராவணன் காவளித்தவனே ()

நாமாவளி.

ஆஞ்சநேயனே வந்தருள்வாய் அடியனுக்கின்பம் தந்தருள்வாய்

---

## மகாவிஷ்ணு ஸ்தோத்திரம்.

அரியாகி யிரணியனை யொருநொடியினில் வதைத்
தவன் பால ரைவர்தம்முள்
அருமையா யுனைத்தொழுத பிரகலாதனற்கு முடி
அளித்தரசாள வைத்து
அரியாகி யக்கினியின் வரையினூட வடிதனை
யாராய்ந்து பார்ப்பதற்காய்

அம்புவிதன்னையே கொம்புகளிலூறச் சென்ற
அரன் செயலறிந்த வடிவே
அரியோகற் பஞ்சனையென்றுருமையுடன்றுயில்கையில்
அன்பாயோகிய வெழுப்ப
அரவசயனம் விட்டுத் துரிதமுடனெழுந்தவா
அடியேனென் சரணமேற்பாய்
அரியே ராவணனுடைய சிரமறுத்தே சீதை
யருஞ் சிறைதனை மீட்டின
ஐயனே நீலநிற மெய்யனே யெனையாளும்
அச்சுதானந்த பொருளே.

---

நாதா வந்தனம் என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாகு, தாளம்-ஆதி.

பல்லவி.

ராமா வந்தனம் ஹரி ராமா வந்தனம்

அனுபல்லவி

ராமா வந்தனம் ரெகு ராமா வந்தனம் (ரா)

சரணங்கள்.

பாண்டு மைந்தரை நற் பக்ஷமாய் நீரே
ஆண்டு வந்தாப்போல் ஆளெனை ரெகு (ரா)
ஆயிரநாமா பூவையளந்தவனே மா
நேயமோடென்னை நீராளு மரி (ரா)
ராகவா வுன்னை நானம்பினேனென்னை
வாகுடனாள வரமருளரி (ரா)

---

பஹாரிமோரி ப்யாரி என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பியாகு, தாளம்-ஆதி.

பல்லவி.

பன்னகசயன பாலனென்னைக் காத்தருள்

அனுபல்லவி.

உன்னை நம்பியும் கிர்பை இன்னம் செய்யாதிருந்தால்
என்னை ரக்ஷிப்பதாரையா அ ஆ எ (ப)

### சரணங்கள்.

சங்கு சக்ரேசா — சாதுக்கள் நேசா
இங்ஙனம் காரு — மென்னை அ ஆ இ (ப)
காரணனே நான் — நாடும்வரம்தனைத்
தாராயெனக்கு நீயே — அ ஆ தா (ப)
பாற்கடல் மீதினிற் — பள்ளிகொண்டவா யெனைக்
காக்கவே நீ வரு — வாய் அ ஆ கா (ப)
ஆலிலைமீது பள்ளி — அமர்ந்ததேவா யெனைச்
சீலமாய்க் காக்க — வா வா அ ஆ சீ (ப)
ராமசாமி யுன்னை — நம்பினேனே யென்னை
நேமமுடனே யாள் — வாய் அ ஆ நே (ப)

---

## சுப்ரமண்ய தேசிக தேவா என்ற வர்ண மெட்டு.

### பல்லவி.

அரிஹரி நாராயண தேவா-அடியெனைக்காவா (ஹரி)

### அனுபல்லவி.

இரணியனுடைய சேயை — இரக்ஷிக்க வந்த நீயே
தருவாயெனக்குன் கெதியை-தடையின்றி இத்ததியே (ஹரி)

### சரணங்கள்.

பாறையோரடி யளந்தாய் — பஞ்சவரை காக்கவந்தாய்
கோராவடிவழகியான — துரோபதி மானங் காத்தாய் (ஹரி)
ஆதிநாராயண தேவா — அடியாரைக்காத்தநாதா
சீதைமகிழ் சமேதா — சிறியேனைக் காக்கவாதா (ஹரி)
ராவணன் றன்னைக்கொன்ற — ராமாவுனை இதுகாரும்
சேவித்த ராமசாமி — தீவினையதனைத்தீரும் (ஹரி)

---

## வந்தெனைக் காத்தருள்வாய் என்ற வர்ண மெட்டு.

### பல்லவி.

அடியேனைக் காத்தருள்வாய்-இவ்வேளையில்
அடியேனைக் காத்தருள்வாய்

### அனுபல்லவி.

மடுவினில் வாரணத்தை — மனமகிழ்ந்தே காத்த
கடவுளரானவரே — இவ்வேளையில் (அ)

சரணங்கள்.

பாரையளந்தவனே பார்வதி சோதரனே
சாரங்கபாணியனே இவ்வேளையில் (அ)
ஆதரவில்லாதோரை யாதரித்தாண்டருளும்
ஆதிநாருயணனே இவ்வேளையில் (அ)
ராமசாமியே வுன்னை நம்புமடியேன்றன்னை
தாமதமின்றிக்காரும் இவ்வேளையில் (அ)

---

உன்னையே நம்பினேன் என்ற வர்ண மெட்டு.

இராகம்-காமபோதி, தாளம்-ஆதி.

பலலவி.

நாரணனே வுந்தன் பாதமே நம்பினேன் (நா)

அனுபல்லவி.

வேறு கதியில்லை வினைகளை தீர்க்க (நா)

சரணங்கள்.

பார்முழுதும் ஆண்ட பஞ்சவரைக்கார்த்து
சீர் துரியோர்ன்றன்னைச் சிதைத்திடச்செய்த (நா)
ஆருமற்ற பாவி போல ஆனேனென்று
கூறுகின்ற என்னைச் சீருடனே கார்க்க (நா)
ராமசாமியேயுன் நற்பதத்தைச் சற்றும்
தாமதமின்றியே தமியேனுக்கீய (நா)

---

ஷை வர்ணமெட்டு.

இராகம்-காம்போதி, தாளம்-ஆதி.

பல்லவி.

பாதமே நம்பினேன் மாதவா முகுந்தா

அனுபல்லவி.

ஆதரவில்லாத-அடியேனுனுந்தன் (பா)

சரணங்கள்.

மாதிமதி சூடும் ஆதி அரனோடு
ஓதின்றி வாதாடும் தேவி சோதரா வுன் (பா)
ஆவலோடி லங்கை யரசு புரிந்த
ராவணனைக்கொன்ற நாயகமேவுன்றன் (பா)

நாமசாமி செப்பும் நற்கவியை ஒப்பும்
தாமோதர நாதா தமியேனுனுந்தன் (பா)

---

வாராயோ என்ற வர்ண மெட்டு.

இராகம்-மோகனம், தாளம்-ஆதி.

* கண்ணிகள்.

பாராயோ பாலனெனைக் காராயோ
பாவத்தை தீராயோ
பாண்டுமைந்தரை ஆண்டதுபோல் (பா)
ஆதியே அதிக குண நீதியே ஆருமெனைச்சோதியே
அரக்கருடைய சிரத்தை துணித்த (ஆ)
ராமனே பன்னிரு நாமனே ரவிகுலசோமனே
ரக்ஷித்தருளு மிகவெனை மெனை (பா)
மன்னனே மா கமலக்கண்ணனே
மீனுளுட அண்ணனே
வந்தென்னைக் காரு மிந்த வேளையில் (பா)
சாமியே உலகளந்த சேமியே
எனக்கு வரம் தாநீயே
தனஞ்செயன்றனைத் தர்க்கார்த்தாண்ட (சா)
மிச்சமே நீ யெந்தன் பக்ஷமே
இருந்தாக்கால் மச்சனே
வெழியேனுயிரு மெந்தனுடலும் (மி)

---

அடியேன்றனையாள்வாய் என்ற வர்ண மெட்டு.

பல்லவி

சமயம் இதுவே ஐயா கமலக்கண்ணா (ச)

அனுபல்லவி,

சமயமிதுவே ஐயா தாமோதரனே துய்யா
இமைப்பொழுதினில் மெய்யா
யெந்தனைச் சொந்தமாய் வந்து நீராளச் (ச)

---

*பா-ஆ-ரா-ம-சா-மி என்ற எழுத்துகளை முதலெழுத்தாக வைத்து பாடும்படியாய் பாம்பூர் சன்னுசி நாய்க்கர் மகன் குமரையா நாய்க்கர் கேட்டுக்கொண்டபடி பாடப்பட்டது.

சரணங்கள்

பாவியான வென்னைப் பாதுகார்த்தருளும்
ஆவென்னை தன்னையுண்ட
அய்யா மெய்யா அடியெனையாளச் (ச)
ஆதவன் குலத்தினில் அரிராமனாக வந்து
வேதியன் றன்னை வென்ற
வேதநாதா வெழியேனைக்கார்க்கச் (ச)
இராமசாமி துதிக்கும் நாதனே இப்பதிக்குள்
நீதனே போதனே ஆதரவாயாள (ச)

மாதவமே என்ற வர்ண மெட்டு.

இராகம்-சஹானா, தாளம்-ரூபகம்.

பல்லவி.

நாரணனே யென்னை நீயே ரக்ஷித்தருள் புரிகுவாயே

அநுபல்லவி

வாரணத்தைக் கார்த்த நாதா
மைந்தனென்னையாள வாதா (நா)

சரணங்கள்

பார்த்தனக்குத் துணைவனான-பருந்துவாகனனேயிந்தக்
கோத்திரத்திலுள்ளோர் சொந்தக் குறைகளை தீர்க்கவந்த (நா)
ஆழ்கடலுற் றுயின்றநாதா அண்டசத்தைவென்றநீதா
வேள்தனையே பெற்றவேதா வெழியேனைக்கார்க்கவாதா (நா)
இராமசாமியே நானுன்னை நம்பியே தொழுதேனென்னை
எமன்வந்தணுகா வரம் எந்தனுக்கு நீயளிப்பாய் (நா)

வாரீர் வாரீர் என்ற வர்ண மெட்டு.

இராகம்-கமாஸ், தாளம்-ஏகம்.

வாரும் வாரும் கோபாலா
வந்தெனைக்காரும் ஸ்ரீலோலா
வாரும் இவ்வேளை கோரும் வரந்தனைத்
தாருமெந்தனுக்கு நீர்-நீர்-நீர் (வா)
பாண்டவர் தங்களைக் கார்த்தவனே
பாவிகள் பவத்தை தீர்த்தவனே
பாலனெந்தனை யாளவேயுந்த
னாலே முடியாதோ சொல்-சொல்-சொல் (வா)

ஆலிலைதன்னிற் றுயின்றோனே
அரக்கரை முன்னாள் வென்றோனே
அடியேனெந்தன் கொடியவினையைச்
சடுதியில் வந்து தீர்-தீர்-தீர் (வா)
இராமசாமியுன் பதங்களையே
நம்பியேயன்பாய்த் தொழுமென்னையே
ரக்ஷித்திடவே இக்ஷணநீயே
லெக்ஷிமியுடன் வா-வா-வா (வா)

180028

---

சங்கரனே என்ற வர்ண மெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி, தாளம்-ஏகம்.

பல்லவி.

ஐயனே யென்னை யாண்டருள்வாய் அன்புடனே நீ (ஐ)

அனுபல்லவி.

பையரவணிந்திடும் பரமனிடபாகத்தில்
சையோகமாக வாழும் தையல்சோதரா வுந்தன்
தாளைத்தொழுதிடும் காளைகிரீடிபகை
யாளியை வெல்தற்கு காலன்றனையுதைத்த
நீலகண்டனிடத்தில் சீலமாயப் பாசுபதம்
சாலவாங்கச் செல்லும்
காலத்தி லவன்முனே
வேளைப்பொருதும் பெணாள்
போலே வடிவெடுத்த (ஐ)

சரணங்கள்.

பாரியாள்தனக்காகப் பாரினிலணைபோட்ட
கார்வண்ணனே யுமது சீரடிக்கபயமிட்ட
கஜத்தைக்கார்த்தவண் டசத்தைவென்றம்பு
வனத்தோர்தம்மையி மிசித்ராக்ஷதரை
சிதைத்தும் பொய்கையில் விஷத்தை யுண்டோர்க்கு
டலத்தைக் கார்த்துமா
விஷத்த ரவில்ச
யனித்தக் கொண்டவுன்
பதத்தை யண்டினேன் (ஐ)

ஆவலாயுன்பால்வந்த ஆஞ்சனேயர்க்கு சிறந்
சீவிவரமளித்த தேவனை யென்பவத்தைத்
தீரும் கருடனேறி வாருமெந்தனையே
காருமெழியேனுன் கோரும் வரந்தனைத்
தாருமெந்தனுக்கு வேறுவினைவராது
பாருமுந்தனை நாள்
தோரும் தொழு மடி
யாரும் பரகெதி யைச்
சேரும்படி செய்யும் (ஐ)
ராமசாமியே யென்னை யேமன்கொண்டேகாமலே
காமன்றனையே யீன்ற தாமோதராகோதண்டக்
கையாவோரடியாய் வையகந்தனையே
மெய்யதாயளந்த துய்யனே நீ காரும்
வெய்யவன் குலத்தில் மெய்யாய்ப்பிறந்து சீ
தையை மணர்ந்திலங்
கையை யாண்டோந்த
லையைப் பாணத்தால்
கொய்ய வந்தரா (மை)

---

## மாமதுரை என்ற வர்ண மெட்டு.

### இராகம்-இந்துஸ்தான்காபி, தாளம்-ரூபகம்.

### கண்ணிகள்.

ஆதிமூலமே நீ யென்னை ஆதரிக்கவேவா
ஆதரிக்கவேவா என்னை ஆதரிக்கவேவா
ஐயாகோதண்டக் கையாபூவுண்ட மெய்யாநீயென்றன்
அல்லல்தனைக் கள்ளமின்றி வள்ள நீ தீர்
ஆவலாய்த் தானே (ஆ)
பாராவாரம் தன்னில் வாழும் பங்கயக்கண்ணா
பங்கயக்கண்ணா செம் பங்கயக்கண்ணா
பாண்டவர்தூதா மீண்டெனை நீதா ணுண்டிடவாதா
பக்ஷமுட னிக்ஷணமே மச்சனே கூறும்
பழுதில்லா மலே (ஆ)

ஆருவாகனன்றன்முன்னே ஆடினதேவா
ஆடினதேவா கூத்தாடினதேவா
அடியேனுடைய கொடும்வினைதனையே சடுதியில் நீயே
அகற்றிடவே பிதற்றிடாம லளித்திடும் வர
மன்புடன் தானே (ஆ)
ராமசாமியே நீ யென்னை ரக்ஷித்திடவே
ரக்ஷித்திடவே என்றும் ரக்ஷித்திடவே
நாதனே கருடன் மீதினில் வருக வேதுதிசெய்த
நாயேனுட தீய்வினையை நேயனே நீ தீர்
தன்மையு டனே (ஆ)

---

## சாவரியா மோரி என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு.

### கண்ணிகள்.

மாதவா கேசவா ஆதிநாரணா
வைகுந்த வாச வா
மலரயன்தன்னை யருளியவுன்னைத்
தொழுதேனென்னைக் கார்-வெரு
பக்ஷமுடனும் கார்-ஒரு
பழுதுமின்றியும் கார்
பாலனுனுந்தனற் பாதந்தொழுதேனென்
பாவந்தனையே தீர்-வெகு
ஆவலுடனே தீர்-மா
தேவனே நீர் தீர்
ஆ தீர் தீர் தீர் தீர் தீர் (மா)
பாராவாரம் தன்னிற்றுயின்ற
பச்சைநீலவண் ணா
பார்தனையாண்ட ராவணனென்ற
பாவியைவென்ற வா-கையிற்
கோவைக்கொண்ட வா-இந்தக்
கோவையுண்ட வா
குவலயந்தனிலென் கவலையகற்றிடக்
கோபாலா நீ வா-கரியைக்
குணத்திற்கார்த்த வா-வேதன்

பவத்தைத்தீர்த்த வா
என்முன் வா வா வா வா வா (மா)
ஆலிலைமீதினிற் பள்ளிகொண்ட
அண்ணலேயுன் னடிதனை
அன்படன் தொழுதே இன்பம் பெறவே
அடியேனுக்கருள் தேவா வெகு
அன்புடனென்னைக் காவா உன்
ஸம்பததனைத் தாவா
அம்பவிதன்னிலே யசுரரை வென்று
ஆனந்தங்கொள் வேதா ஸ்ரீ
ஜானகிகனே நீதா திரு
மாமணம் புரிந்த நாதா வரந்
தா தா தா தா தா (மா)
மாயவா ராமசாமி தனைக்கார்த்திட வேகமாய் வருகுவாய்
பாசமோடிந்தப் பாரினில்வந்த பாண்டவர் தம் தூதா—வனை
யாண்டிடவே வாதா இன்
னரிக்குத்தகாதா
பாவிகளந்திய காலத்திலுந்தன் நாமந்தனையே மெய்-யாக
நவின்றோர் தங்களை ஆள்
பவனேயாண்டருள்செய் கிர்பை
செய் செய் செய் செய் செய் (மா)

---

ஸ்ரீ ராமச்சந்திரனே என்ற வர்ண மெட்டு.
இராகம்-இந்துஸ்தான்-பார்வி-கோட்டு, தாளம்-ஆதி.
கண்ணிகள்

ஐயனே வைகுந்த மெய்யனே யெனையிந்த
வையந்தனிலேயாள வா வா வா
ஆதியே குண நீதியே (ஐ)
தாமோதரானந்தனே காமன்றனையீன்றோனே
தமியேன்றனைக்கார்த்திட வா வா வா
சாமியே அருள் நேமியே (ஐ)
பாண்டவர்களுக்காக வேண்டி துரியோதனன்
பாவிமுன் தூது சென்ற வா வா வா

பாருமே கலி தீருமே (ஐ)

ஆதிநாருயணனே சீதையணவாளனே
அன்புடனே யென்னை நீ கார் கார் கார்
ஆகவா காரும் மாதவா (ஐ)

ராகவா வுனைத்தொழும் ராமசாமிதமிழை
நண்பாய்க்கேட்டெனைக்கார்க்க வா வா வா
நாடினேனுனைத் தேடினேன் (ஐ)

---

ஷை வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தானி-பார்வி-நோட்டு, தாளம்-ஆதி.

கண்ணிகள்

அய்பனே கோதண்டக் கையனே பூவுண்ட
மெய்யனே யென்னையாள வா வா வா
ஆயனே திரு நேயனே (அ)

சித்தமகிழ்ந்துந்தனே நித்தயதொழு மெந்தனே
உத்தமா கார்த்தருள வா வா வா
தேடினேன் கீர்தம் பாடினேன் (அ)

பார்வதி சோதரனே கார்மேக சீதபனே
பாலனென்னை நீ கார்க்க வா வா வா
பக்தி யோடுனை நத்தினேன் (அ)

ஆவலுடனிலங்கை ராவணன்றன்னை வென்ற
தேவனே யெனைக்கார்க்க வா வா வா
ஐயனே. அருள் துய்யனே (அ)

ராமசாமி தனையே நேமமுடனே கார்க்க
நண்பாய்க் கருடனேறி வா வா வா
நாதனே குண நீதனே (அ)

---

பாம்பூர் ராமலிங்கநாய்க்கர் மகன் சாமிநாய்க்கர்விருப்பத்தின்படி
இன்னமேன்மீதில் வர்மமாமா என்ற மெட்டில் பாடப்பட்ட

கண்ணிகள்

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

ஐயா வைகுந்தம் வாழும நாதா முன்னே
ரானையைக் கார்த்தருளு நீதா

வெய்யோன் குலத்திலுற்ற வேதா எந்தன்
வினைகளை தீர்த்தருளும் போதா (ஐ)
வையந்தனையளந்த பாதா இரு
கையாலுனைத்தொழுதேனீதா
மெய்யா யெந்தனையாள வாதா சீ
தையை மணம்புரிந்திடும் சமேதா (ஐ)
பாலர்கள் நாங்களொன்றாய்க் கூடி ஹரி
பஜனையென்றெண்ணியே கொண்டாடி
சாலத்தொழுமெங்களைக் கோடி வினை
சார்ந்தாலும் தீர்க்கவாருமோடி (ஐ)
ஆயர்குலத்திலுற்ற கோனே உனை
யன்பாய்த்தொழுபவரைத்தானே
நேயமாய்க் காத்திடும் சீமானே எனை
ரெக்ஷித்தருளுவீர் பூமானே (ஐ)
ராமசாமி தமிழைப் பாடி வெகு
நண்பாய்த் தொழுதோமுமை நாடி
வமனெங்களை யினித்தேடி வரா
தென்றுங் காத்தருளவேன் மோடி (ஐ)

---

ஆள்வாரோ அரிராமன் என்றமெட்டு

பல்லவி.

சாமியே யெனக்காரும் இந்தத்
தருணம் செய்தேன் சரணம் ராம (சா)

அனுபல்லவி.

காமனைப்பயின்ற நாதனே கடையோன் வினையைத்
தவிர்த்தருள் ராம (சா)

சரணங்கள்

பாரத மீடேறச் செய்தவா எந்தன்
பாவ வினைகளோடச் செய்தவா (பா)

தாரணிதனே யோர்குடைக் கீழாற
சாண்டவாவுனே வேண்டினேன் ராம (சா)
ஆலிலைமேற்பள்ளி கொண்டோனே அடி
யார்களை யெந்நாளும் காத்தோனே (ஆ)
வேலைமேற்றுயில் மாலே யெந்தனே
ஞாலந்தன்னிலெந் நாளும் கார் ராம (சா)
ராமசாமியைக் காத்திடும் தேவா அதி
நண்பாய்க்கருடன் மீதேறி வா வா (பா)
ஏமனெந்தனைத் தொடராதவரம்
இன்பமா யெனக் கீந்தருள் ராம (சா)

---

இராகம்-சங்கராபரணம், தாளம்-ரூபகம்.

பல்லவி.

* ஏசுவேணுதா ஹரி
இராமனே நீ யென்னை யாளாவிடி லுன்னை (ஏ)

அனுபல்லவி,

ஆசைகளான ப சாசைத்துரத்தியே
நேசமாயாளாமல் மோசம் செய்தாலே யான் (ஏ)

சரணங்கள்.

பாரதமீதேறக் காரணமானவோ
நாரணனே யென்னைக் காராவிடி லுன்னை (ஏ)
ஆதரவுயின்றி பேதவிக்குமென்னைப்
பாதுகாராவிடில் ஸ்ரீதரனே யுன்னை (ஏ)
ராமசாமிசொல்லும் பாமாலைபூண்டவா
மாமகிழ்வாகக்கா ராமவிருந்தக்கா (லே

---

* ஏசுவேன்-நாதா என்னும் இரண்டு வார்த்தைகளும் சேர்ந்து ஏசுவேணுதா என்று சொல்லப்பட்டது.

புன்னைவனம்தன்னில் வாசா என்ற வர்ண மெட்டு.

இராகம்-தோடி, தாளம்-ஆதி.

பல்லவி.

பண்டரி புரத்துள்வாசா பவநாசா ஸ்ரீநிவாசா (ப)

அனுபல்லவி.

சண்டனை யுதைத்த சீல கண்டன்வினைதீர்த்த நீதா
வண்டுசேர்குழலாள் சீதை மாதுமகிழும சமேதா (ப)

சரணங்கள்.

பாதாளலோகங்களைக எதுவா யென மாக
பண்பாயுருவமானவா அன்பாயெந்தனையாளவா (ப)
ஆழிக்கிரித்திடுங்கையா பாழிமிகுத்திடுமெய்யா
அடியேனல்லலைத் தீர்க்க கொடியில் வருவாயோக்க (ப)
ராமசாமிசொல் துதியை நேமமாய்க்கேட்டித்ததியே
காதனே விரைந்துவாரும் நீதனே யெந்தனைக்காரும் (ப)

---

வன்னமயூர மென்ற வர்ண மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கெருடன் மீதேறியே வாரும் என்மேற்
கிருபைவைத்தேவினை தீரும்
அரிகிஷ்ணவென்று
அலரின மத
கரியினிடர் தீர்த்துக்
கார்த்தவனே யென்னைக்.
காலனணுகாவரம் தாரும் எந்தன்
கர்மவினைபோக்கி நீரும் (கெ)
பன்னகத்திலுறை நாதா மிகு
பக்ஷம்வைத்துக்காரு நீதா
கன்னி சீதைக்காக
கவிப்படையைக்கூட்டி
தென்னிலங்கையாண்டோன்
சென்னிபத்துங்கொய்த
தேவாவுலகளந்த பாதா உந்தன்
சேயெனக்கு முத்தி தாதா (கெ)

பாழியாய் வந்தோரைத் தானே கொன்று
பக்தரைக்காத்த கோ மானே
ஆழிதரித்தோனே
அனுதினமுநானே
ஏழைபுனைத்கானே
ஏற்றித் தொழுதேனே
என்முறைகேட்டிர்பூ மானே இங்கு
இன்னும் வாராததேனோ காணேன் (செ)
ஆரணனிந்திரன் போற்றும் இணை
யடிதந்து என்துயர் மாற்றும்
நாரணனே பரி
பூரண னேயென்ன
காரண மோயென்னைக்
காராதிருக்கிறீர்
சர்த்தனே யிதென்ன ஞாயம் நான்க
டைத்தேரச் செய்யுமு பாயம் (செ)
ராமசாமிமுறை கேளாய் வெகு
நண்புடனைபென்னை யாளாய்
மாமன்றனைவென்ற
வள்ளலே யிருந்த
மாமகிழ்வாகவே
மைந்தனெனைக்காக்க
வாரும் துளபமணித் தோளா வரம்
தாரும் மாமரைமலர்த் தாளா (செ)

---

பல்லவி.

எமனுற்பய மேது இராம
சாமி துணையிருக்கும்போது (ஏ)

அனுபல்லவி.

காமுகன்றன்னைப்பெற்ற காமுகன்றன்னைப்போற்றி
காமவெறியை மாற்றி க்ஷேமமுற்றுவினிமேல் (ஏ)

சரணங்கள்.

பாதகத்தோடயல் மாதர் கலவியையும்
சூதையும் கனவிலு மேதவிழ்த்திருப்போர்க்கு (ஏ)

ஆகிநாருயணனே சீதைமனேகரனே
பாதவாமுருந்தாவென் றேதிப்பதம்பெற்றுக்கால் (ஏ)
ராமசாமிகவிலும் மாமந்த்ரமிதுவென்று
ராமாவென்றனுதினே மேமொழிந்திடுவோர்க்கு (ஏ)

---

இராகம்-கல்யாணி, தாளம்-ஆதி.

பல்லவி.

மனமே நீநல்ல மார்க்கத்தைத்தேடு (ம)

அனுபல்லவி.

தனத்தை நீ நம்பாதே தனேப்புகழ்ந்தியம்பாதே
இனத்தையு நம்பாதே இராமனே பணிந்திப்போதே (ம)

சரணங்கள்.

தன்னேப்புகழ்ந்தும் தாசரை யிகழ்ந்தும்
இன்னிலத்திலிருந்தால் யேங்கித் தவிப்பாயே (ம)
பாரினுனேப்போலே பலருண்டுமென்மேலே
வீரியம் பேசாமலே வீணுய்த்திரியாமலே (ம)
ஆர்சதம் இங்குவுண்டு அரிபதம் அங்குவுண்டு
ஆனதாலவரைக்கண்டு-அன்பாய்த்தொழுது என்றும் (ம)
ராம பஜனேசெய்து நலத்தைத் தேடாவிடில்
எமன்வந்திழுத்து இம்சைகள் செய்திடுவான் (ம)

---

பல்லவி.

மனமே நான் சொல்லும்
ஞருதியைக்கேட் டந்தப்பிரகாரம் நடந்துகொள்
தினமே ஓகோ (ம)

அனுபல்லவி.

தினகரனுதிக்குமுன் றுயில்விட்டெழுந்து
ஸ்நானங்கள் செய்திடவேணும்-அனு
ஷ்டானங்கள் செய்திடவேணும்
குணமுடன் மங்கையர் படைத்திடுமன்னத்தைக்
கூசாமலுண்டிட வேணும்-வாய்
பேசாமலுண்டிட வேணும்-ஓகோ (ம)

## சரணங்கள்.

கவலைகள் நீயடைந் தாலுமதையொரு
கணத்திலே மறந்திடவேணும்-பக்த
ஜனத்திலே யிருந்திடவேணும்
குவலயந்தனிலுள்ளோர் தவறுகள் செய்தாலும்
குணமுடனுதரிக்க வேணும்-நல்ல
குணமுடனுதரிக்க வேணும்-ஓகோ (ம)

புன்மை புகுத்தும்சூதில்-புகுராமல்கள்ளுண்ணுமல்
புராணங்கள் படித்திடவேணும்-வேத
புராணங்கள் படித்திடவேணும்
கன்மவினையைப்போக்கும் தாரகமந்திரத்தைக்
கருத்தினில் நினைந்திடவேணும்-சதா
கருத்தினில் நினைந்திடவேணும்-ஓஹோ (ம)

180028

மதிகதிர்தண்ணீர் முதியோரிவைக்கெதிர்
மலஜலவிசர்க்கம் செய்யாதே-கோவிற்
றலங்களில் விசர்க்கஞ்செய்யாதே
நிதிதேடுவதற்காய் மதிகெட்டுக்களவை
நீயொரு போதும் செய்யாதே-பொய்யை
நீயொரு போதும் சொல்லாதே-ஓஹோ (ம)

அடுத்தோர் தங்களைக் கெடுத்திடவே யுந்தன்
அகந்தனி லேநீ யெண்ணுதே-அதற்
குகந்ததீங் கிழைக்க யெண்ணுதே
எடுத்திடும் வேலையை முடித்திட இயல்பு
இல்லையே லதை யெண்ணுதே-முயற்சி
இல்லையே லதை யெண்ணுதே-ஓஹோ (ம)

பாதகங்களை யொரு போதுமே புரியாமல்
பார்க்கறஞ் செய்திடவேணும்-முப்பத்
திரண்டறம் செய்திடவேணும்
காதலாகவே அயல் மாதர்கலவிதன்னை
கருதா திருந்திடவேணும்-உந்தன்
கனவிலு மறந்திடவேணும்-ஓஹோ (ம)

ஆகமவிதிதவ ராமலே நடந்திட
ஆசைமிகக்கொள்ள வேணும்-பே
ராசைதனைத்தள்ள வேணும்
தேகமெடுத்ததற்காய் தீமையை நீக்கி நன்மை
செய்தல்லோ புகழ்பெறவேணும்-பன்னு
ளுய்தல்லோ புகழ்பெறவேணும்-ஓகோ (ம)

ராமசாமிசொற்கேட்டு க்ஷேமமுடனே அரி
ராமபஜனைசெய்ய வேணும்-ஹரி
ராமபஜனைசெய்ய வேணும்
எமன் பயத்தைப்போக்கி இனிப்பிறப்பின்றியே
இருந்திட வரம்பெறவேணும்-சாயுச்யத்
திருந்திட வரம்பெறவேணும்-ஓகோ (ம)

## நாமாவளி.

ஹரிநாராயணா வந்தருளும் சிறியேன் வாழவுகந்தருளும்
தாரகநாம மந்திரமே தாசர் கடத்தேருந் தந்திரமே
ஆலிலைமீது துயில்பவனே பாலனைத்தற்காத்தருள்பவனே
பண்டரிபுரத்தில் வாழ்நாதா தொண்டர்கள்வினையைதீர்நீதா
தாமோதராசமாமுகுந்தா தமியேனுக்குநன்வரந்தா.

## வேறு நாமாவளி.

கேசவா பரந்தாமா நேசமாய் வரந்தாதா
வைகுண்ட வாசவா மாதவ கேசவா
ஸ்ரீதரா மாதவா தாமோதரா ஆளவா.

---

## விருத்தம்.

இருநிலமாள்மன்னன் அருந்தவம்புரிந்ததால்
இராமனுயவதரித்து
இனிமையுடன் கோசிக முனிவன்செய்வேள்வியை
இரக்ஷிப்பதற்காகச் சென்
றரிவைதாடகைதனை யொருசரத்தாற்கொன்று
மவள்பெற்றபுதல்வர்தம்மை

அந்தகனுலகுக்கும் கொந்தளிப்பானதோர்
ஆழிக்குமனுப்பிவைத்து
பெருமையாய் வரும் வழியில் திருவடியாற்கல்லைப்
பெண்ணுருப் பெறவருளியே
பிரபலமானதொரு வரன்வில்வளைத்துமா
பெண்ணை மணம் புரிந்து பின்னும்
ஹரிவில்லைக்கொணர்ந்த ஸ்ரீ பரசுராமன் கெருவ
மறவொளித்தபோத்தி சென்ற
ஆதியே அதிககருண நீதியேயென்னையாளு
மச்சுதானந்த பொருளே. (1)

உற்ற சீர் வரம்பெற்ற சிற்றன்னை சொற்படிக்
குகந்து கானகஞ் செல்ல நீ
ரோடிடுங் கங்கையி லோடம்விட்டுதவியவ
னுறவுதனைக்கொண்டாடியே
நற்றவம் செய்தப ரத்துவாச முனிவ
ராச்சிரமத்தோரிரவுதன்
நங்கையும் தம்பியும் தங்கிச்சித் திரகூடம்
நண்ணியபின் பரதனும்
பெற்றோன் மாண்டானெனவ ரற்றியே மனந்தேறி
பிள்ளைசெய் கிரிகை கையாற்
பிசகாமற் செய்தவுடன் வசையின்றித் திருமுடி
பெறுமென்றப் பரதன்வேண்ட
அற்றன்சொற்கடவாது ரெட்டைபேழாண்டுவா
சாளப்பாதுகமளித்த
ஆபனே சீதைமகிழ் நேயனே யென்னையாளும்
அச்சுதானந்த பொருளே. (2)

எழில்பஞ்சவடிக்கேகும் வழிதனில்விராதனெனு
மிராக்ஷதன்றன்னைக்கொன்று
எரியில் ப்ரவேசித்த சரபங்கமுனிமோக்ஷ
மெய்திடக் கருணைகூர்ந்து
வழுவின்றி திரவிட முழுதமுணர் முனியாவம்
வளங்கிட யேற்றுப்பஞ்ச

வடிசென்று மதங்கொண்ட கொடியதொரு சூர்ப்பநகை
        மடிநாசிகுழைவாங்கிட
பொழியுமெழிலைவல் செயக்குழுமி எதிர்த்தோரையம்
        மொய்க்குழலாள் முன்னவ்வியாய்
மோசமாய் வந்தமாரீசனையும் கொன்றெருவை
        முதல்வனைத்தகனித்தென்று
மழியாதவரப்பெற்ற கழுக்கவந்தனைச் சுவர்க்க
        மனுப்பிசவரிக்கிமோச்ச
மன்பாயளித்தவா நண்பாயெனையாளு
        மச்சுதானந்தபொருளே. (3)

ஒருசரம்விட்டேழு மராமரம் துளைத்ததி
        யுக்ரமமுள்ள வாலி
உயிரைக்கவர்ந்தவன் பயின்றவங்கதனுக்கு
        உடைவாள் கொடுத்தபின்பு
திருமகளைத்தேடச்சுக்கிரிவனுக்குத்தாரம்
        செப்பவே அனுமந்தனும்
திரைகடல் தாண்டியவ் விறைவியினிலைதனைத்
        தெரிந்துவந்தருளிச்செய்ய
பருதிமகனோடும்வா னரர்களோடும் சுவேல
        பர்வதத்தங்கியேகும்
பகர்னனொடு ராக்ஷதரை மிகக்கொன்று இராவணன்
        பத்துமுடிகொய்திலங்கை
யரசை விபீஷணர்க் கருளியே மனைவியோடு
        ஐயோத்தி நகர் வந்தர
சாண்டவாயானுனை வேண்டினேனெனையாளு
        மச்சுதானந்தபொருளே. (4)

---

## மங்களத்தரு.

பஞ்சமா என்ற வர்ண மெட்டு.

ராகம் காபி, ஆதிதாளம்.

கண்ணிகள்.

சித்திவிநாயகர்க்கும் மங்களம் பிர்ம
தேவனுக்கும் வாணிக்கும் மங்களம்.

சேவற்கொடியோனுக்கும் மங்களம் வள்ளி
தெய்வானையம்மனுக்கும் மங்களம்.
பரம்பரனுக்கும் மங்களம் எங்கள்
பார்வதியம்மனுக்கும் மங்களம்.
ஆதிவருகனுக்கும் மங்களம் எங்கள்
அன்னையான சீதைக்கும் மங்களம்.
இராமசாமிதனக்கு மங்களம் இந்த
நானிலத்துள்ளவர்க்கும் மங்களம்.

---

## லாலி-தரு.

இராகம்-பைரவி, தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பாண்டவர் தூதனானவா லாலி
பக்தரை ரக்ஷித்தவனே லாலி
ஆதிநாராயணனே லாலி
ஆழ்கடற்றுயின்றவனே லாலி
ராமசாமியான்தேவா லாலி
நானிலமளந்தவனே லாலி

---

## வாழித்தரு.

போதும்போது மென்ற வர்ண மெட்டு.

இராகம்-மோகனம், தாளம்-ஆதி.

பல்லவி.

வாழி வாழி வாழி வாழி
வாழி வாழி வாழியே-கரி
வதனவி நாயகரும் (வா)

அனுபல்லவி,

ஆழிசூழிலங்கைபோய் பாழியர்களைக்கொன்ற
ஆதி நாராயணரும் சீதைபிராட்டியரும்(வா)

சரணங்கள்.

பாலனூண்புசித்திடு நீலகண்டனும் திருக்
கோலவிழியாளான சீலவம்பிகையாளும் (வா)

ஆறுமுகவனுமித் தாரணிபடைத்திடக்
காரணமானவரும் பாரதிவாணியாரும் (வா)

ராமசாமியுமதி நேமமாயரிராம
நாமசங்கீர்த்தன மேமொழிந்திடுவோரும் (வா)

முற்றிற்று.



## அறிவிப்பு.

ஐயன்மீர்! எனது பிரபிதாமகன் (Paternal Great Grand Father) அதாவது எனது மூதாதையின் பாட்டனான ஸ்ரீலஸ்ரீ ஆள்வார்பிள்ளையவர்கள் பாடிய தர்மர் அஸ்வமேதயாக அம்மானை என்வசம் எட்டுப்பிரதியிலிருக்கிறபடியால் அதனை அச்சிட விருப்பமுள்ளவர்கள் எனக்கு எழுதினால் அதைக்கொடுக்கத் தயாராயிருக்கின்றனன்.

P. A. R.

---

## கவனிப்பு.

கனவான்களே! 'நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்' என்னும் முதியோர் வாக்கின்படி நாம் நமதாயுள்பரியந்தம் நோயில்லாதிருந்தால் திடகாத்திரராய் நமது ஜீவனத்திற்கு வேண்டிய தொழிலைச் செய்ய அநுகூலமாய் இருக்கும் ஆகையால் பிணியால் வருந்தும் ஒவ்வொருவரும் தங்கள் வயதையும் வியாதியையும அடியில்கண்ட விலாசதார்களில் யாருக்கேனும் எழுதி வியாதியைத் தீர்க்கத்தக்க ஔஷதங்களை வாங்கியருந்துமாறு கோருகின்றனம்.

விலாஸம்

1. பி. எ. ஆர்.
பாம்பூர்
பரம்பக்குடி போஸ்ட்

2. ஷேக் அப்துல்காதர் ஸாஹிப்,
நேட்டிவ் டாக்டர்
அம்மையனுய்க்கனூர்.

3. J. செங்கோல்,
ஸ்கூல்மாஸ்டர்
உப்பூர்
இராமநாதபுரம் ஜில்லா.